Government come forward to find out suitable areas and grow vegetables on a large scale for sending them to foreign countries and earning foreign exchange?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: உலக பாங்கைச் சேர்ந்தவர்கள் அப்படிப்பட்ட கேள்வியைக் கேட்டார்களா என்பதற்கு தகவல் இப்பொழுது இருக்கவில்லை. அப்படி நிலைமை இருக்குமானுல், அரசாங்கம பரிசீலிக்கலாம். இப்பொழுது அந்த நிலைமை இல்லை.

திரு. எஸ். அக்னிராஜு: சில வங்கிகள் தனிப்பட்ட முறையில் விவசாயிகளுக்கு இப்பொழுது கடன கொடுத்து வருகின்றன. காய்கறி உற்பத்தி செய்பவர்களுக்கு அப்படிப்பட்டக் கடனை ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இந்தக் கடன் வேளாண்மைத் துறை மூலமாகத்தான் விவசாயிகளுக்குத் தரப்பட்டுவருகிறது. பாங்குகளின் மூலமாகவும், ஊராட்சி ஒன்றிப்புகளின் மூலமாகவும் தருகின்ற விவரம் இல்லை.

Firms black listed in City

* 683 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state:

(a) whether the Commercial Taxes Department has black listed firms in Madras City during 1968–1969–1970; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

சித்திரைப் பொருட்காட்சியில் கேளிக்கை வரி விலக்கு

*** 684 வினு—திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969-ம் ஆண்டு, மதுரையில் நடைபெற்ற "சித்திரைப் பொருட்காட்சியில்" ஏற்பாடு செய்யப்பட்ட சினிமா, நடன, நாடக நிகழ்ச்சிகளுக்கு "கேளிக்கை வரி"யிலிருந்து விலக்கு அல்லது சலுகை அளிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனின், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: (அ) & (இ) நடனம், நாடகம் இவற்றிற்கு கேளிக்கை வரி இல்லை. ஆனுல் திரைப்படக் காட்சிகளுக்கு கேளிக்கை வரி உண்டு. 1969-ம் ஆண்டு மதுரையில் நடந்த சித்திரைப் பொருட்காட்சியில் ஏற்பாடு செய்யப்பட்ட திரைப்படக் காட்சிகளுக்கு, கேளிக்கை வரியினின்றும் விலக்கு அளிக்கப்படவில்லை.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளிப்பதில்லை என்று சொன்னார்கள். அரசாங்கத்தினரால் பதிவு செய்யப்பட்ட சில அமைப்புக்கள், கல்லூரி வளர்ச்சி நிதி, உயர்நிலைப் பள்ளி வளர்ச்சி நிதி என்று பதிவு செய்யப்பட்ட அமைப்புக்கள் வளர்ச்சி நிதியின் பெயரால் மார்னிங் ஷோஸ், பெனிபிட் ஷோஸ் போடுவதற்கு அரசாங்கத்தினிடம் அனுமதி கேட்டால், அதற்கு அரசாங்கம் வரி விலக்கு அளிப்பதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் சொன்னது சித்திரைப் பொருட்காட்சியில் ஏற்பாடு செய்யப்பட்ட திரைப்படங்களுக்கு கேளிக்கைவரி விலக்கு இல்லை என்று சொன்னேன். அது போன்றவர்கள் மனுப் போடுவார்களேயானால், அதை அரசாங்கம் கவனிக்கும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இப்பொழுது அரசாங்கத்தாரால் சில குறிப்பிட்ட நிகழ்ச்சிகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு வரி விலக்கு இருக்கிறது. ஸ்கூல் பங்ஷன்ஸ் நடத்தினால் அதற்கு விதிவிலக்கு இருக்கிறதா என்பதை வரையறுத்து அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பொது நிகழ்ச்சிகளுக்கென்று தனியாக மனுச் செய்வார்களேயானால், அதனுடைய நிலைமையை ஆராய்ந்து அரசு உத்தரவு பிறப்பிக்கும்.

Market study on sugar

* 685 Q.—**Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Thiru S. N. CHITHAN** : Will the Hon. Minister for Food and Commercial Taxes be pleased to state : Whether any market study regarding (i) the production output and the profit, (ii) the consumers, impact; and (iii) the price level has been made in this State after the partial de-control of sugar?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. ஆர். கருப்பையா : சர்க்கரையைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு ஆலையிலும் சர்க்கரை தேங்கிக் கிடக்கிறது என்ற காரணத்தினால், ஆலைக்கு கரும்பு அனுப்புகிறவர்களுக்கு பணம் கொடுக்கப்படவில்லை. டன் ஒன்றுக்கு ரூ. 10 தான் அட்வான்ஸ் கொடுக்கப்படுகிறது. முன்பு டன் ஒன்றுக்கு ரூ. 70 அட்வான்ஸ் கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது ரூ. 10 தான் கொடுக்கப்படுகிறது. இதுபோன்ற நிலையை நீக்குவதற்கு தக்க நடவடிக்கை எடுத்து, டன் ஒன்றுக்கு ரூ. 50 அட்வான்ஸ் கொடுக்க அரசு வகை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வெளிமார்க்கெட்டில் விற்கப்படுகிற சக்கரையைப் பற்றிய கேள்வி இது. இருந்தாலும், அங்கத்தினர் கேட்பதற்குப் பதில் சொல்கிறேன். சர்க்கரை தேங்கிக் கிடக்கிறது என்பதற்காகத் தான், அவ்வப்பொழுது சர்க்காரில் ஒதுக்குகிற லெவி சர்க்கரையை அந்தந்த மாதம் விற்றுவிடவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறோம்.